# இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் பிரித்தானியாவின் புதிய சீர்திருத்தங்களும்!

பிரித்தானிய அரச சேவையிலிருந்து ஐந்தில் ஒரு பகுதியினரை குறைக்கும் யோசனை கலந்துரையாடப்பட்டு வருகிறது. அத்தியாவசிய சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நீக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொண்ணூற்று ஓராயிரமாகும். அது பிரித்தானிய அரசாங்கத்தின் செலவைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாகும்.

வீட்டில் தட்டுப்பாடு ஏற்படும் போது செலவைக் குறைக்கும் விதம் போன்று, சிரமமான வேளையில் அரசாங்கம் செலவைக் கட்டுப்படுத்த வேண்டியதோடு, அதனால் சேமிக்கப்படும் நிதியை வேறு துறைகளுக்குப் பயன்படுத்த முடியும் என்று பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அரச ஊழியர்களுக்கு அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியனிலிருந்து விலகியது மற்றும் கொவிட் தொற்று நிலைமைக்கு முகம் கொடுத்தமை போன்றவற்றால் பிரித்தானியாவின் பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பு சிக்கலான நிலைக்கு உள்ளானதுடன் அரசியலும் குழப்பத்துக்கு உள்ளானது. கடந்த ஜூலை மாத நடுப்பகுதியில் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்தார். அவர் தலைமை வகிக்கும் கொன்ஸர்வேட்டிவ் கட்சி புதிய தலைவரை தெரிவு செய்யும் வரை அவர் பதவியில் இருப்பார். அதிகாரத்துக்கு வரும் பிரதமருக்கு பொருளாதாரத்தை சீர்செய்யும் அடிப்படையாக அரச சேவையில் திருத்தங்களுக்கான யோசனையை அவர் முன்வைத்தமை கவனிக்க வேண்டிய விடயமாகும்.

பிரதமரின் இந்த யோசனைக்கு, அவரின் நெருங்கிய செயலணி அங்கத்தவர்கள் தொடக்கம் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் தொழிற்சங்கங்களிடையே பாரியளவில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. சேவையிலிருந்து ஊழியர்களை நீக்குவதால் மக்கள் சிரமத்துக்குள்ளாவார்கள் என்பது விமர்சகர்களின் கருத்தாகும். வாழ்வது கூட சிரமமாக உள்ள காலத்தில் ஊழியர்களின் பிரச்சினைகளை கருத்தில் கொள்ளாது வேலையிலிருந்து நீக்குதல் முறையில்லை என ஒரு சாரார் கூறுகின்றார்கள்.

அரச ஊழியர்களை குறைக்கும் முறை பற்றிய யோசனை குறித்து பல எதிர்ப்புகள் உருவாகினாலும், அரசாங்கம் செலவைக் குறைத்து திறமையான ஆட்சியை நடத்துவது முக்கியம் என்று யோசனையை ஆதரிப்பவர்கள் கூறுகின்றார்கள்.

அரச செலவைக் குறைப்பது முக்கியம் என்பதோடு, அவ்வாறான நடவடிக்கை நேரடியாக மக்களிடமிருந்து வசூலிக்கும் வரியில் பாதிப்பை ஏற்படுத்தும். அதிகளவிலான ஊழியர்களை பராமரிப்பதற்கான நட்டத்தை செலுத்துவது வரி செலுத்தும் பொதுமக்கள் என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

பிரித்தானியாவில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள், தீர்மானம் மிக்க இடத்தில் இருக்கும் இலங்கைக்கும் முக்கியமாகும். பொருளாதாரம் மறை ஏழு வரை குறைந்துள்ளதோடு, அரச வருமானத்தில் நூற்றுக்கு எண்பத்திரண்டு வீதத்தை அரச ஊழியர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்துக்காக செலவிட வேண்டியுள்ளது. அரச ஊழியர்களின் வேதனத்துக்கான செலவானது வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது பெரும் பாதிப்புக்கு உள்ளான விடயமாக இருந்தது. வரவு செலவுத் திட்டத்தில் அதனை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் கடன் பெற நேரிட்டதுடன், உள்ளூர்க் கடனும் அதிகரிக்கக் காரணமாக அமைந்தது. அரச சேவைக்காக செலவிடும் பணம் அதிகம் என்றாலும், அதனால் பெறப்படும் சேவையில் சாதாரண மக்களுக்கு திருப்தியில்லை.

நாம் தொழில்நுட்ப யுகத்தில் நுழைந்துள்ளோம். காரியாலயத்தில் செய்யக் கூடிய வேலைகள் பலவற்றை இணையத்தளம் ஊடாக செய்யலாம். பாரிய மாற்றங்கள் வங்கித்துறையில் ஏற்பட்டுள்ளன. கல்வித்துறையிலும் நன்மையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரச சேவைகளை இணையதளமூடாக செய்யக் கூடியவாறு மாற்றுவதுடன், அதன் மூலம் காலத்தையும் பணத்தையும் சேமிக்க வழியேற்படும்.

உலகில் பல நாடுகளில் இணையதள அரச சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் மாற்று யோசனைகள் கூறப்படுவதுடன், தொழில்நுட்பத்தால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மை குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கையில் கணணிக் கல்வி உயர் மட்டத்தில் காணப்படுகிறது. அரச சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது மாத்திரம் வரிசையில் நிற்கத் தேவையில்லை. தெரிவு செய்யப்பட்ட துறைகளில் மாத்திரம் மாற்றங்களை ஏற்படுத்துவதோடு அரச ஊழியர்களுக்கு நவீன அறிவு மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்த பயிற்சிகளை வழங்க வேண்டும். மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் சேவையை வழங்குவதே அரசாங்கத்தின் பொறுப்பு.

தமிழில்: வீ.ஆர்.வயலட்